செய்தி வெளியீடு எண்: 152                                    நாள்: 07.03.2013

## செய்தி வெளியிடு

## 23 வது மாநில தொழிலாளர் அலுவலர்கள் மாநாடு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.த.செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இன்று (7.03.2013) சென்னை தேனாம்பேட்டை D.M.S வளாகத்தில் (TNPHS) கூட்ட அரங்கில் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 23 வது மாநில தொழிலாளர் அலுவலர்கள் மாநாடு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.த.செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தொழிலாளர் நலத்துறை ஆணையர் டாக்டர் பி. சந்திரமோகன் வரவேற்றார். தொழிலாளர் நலத்துறை செயலாளர் திரு. மோகன் பியாரே, இ.ஆ.ப., கர்நாடக மாநில தொழிலாளர் ஆணையர் திரு. ஹர்ஸ் குப்தா, இ.ஆ.ப., தொழிலாளர் நலத்துறை கூடுதல் ஆணையர் திரு.கருப்பசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.த.செல்லப்பாண்டியன் குத்துவிளக்கு ஏற்றி மாநாட்டினை தொடங்கி வைத்து பேசுகையில் 1997 ஆம் ஆண்டிற்கு பிறகு 16 வருடங்களுக்கு பின்னர் நடைபெறும் 23வது மாநில தொழிலாளர் அலுவலர்கள் மாநாட்டினை தொடங்கி வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்தார். மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களது ஆட்சியில் அனைத்து துறைகளும் சிறப்பாக செயல் பட்டு வருகிறது. முதலமைச்சர் அம்மா அவர்கள் தொழிலாளர்களின் உரிமைகளை அவர்களது நலன்களை பாதுகாக்கவும் தொழிலாளர் நலச்சட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி அதை செவ்வனே அமலாக்கம் செய்வது தொழிலாளர் துறையின் முக்கிய பங்காகும். இந்த மாநாட்டில் தொழில் தகராறு சட்டம், குறைந்த பட்ச ஊதிய சட்டம், சம்பள பட்டுவாடா சட்டம், சம ஊதிய சட்டம், மகப்பேறு நலச்சட்டம், மற்றும் தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் போன்ற சட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களையும் உங்கள் ஒவ்வொருவரது அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள இந்த மாநாடு ஒரு பெரிய வாய்ப்பாக அமையும்.

தமிழ்நாட்டில் உள்ள சுமார் 3 கோடி தொழிலாளர்களில் 8 சதவீதம் மட்டுமே அமைப்பு சார்ந்த பிரிவினையும் மீதமுள்ள 92 சதவீதம் அமைப்பு சாரா பிரிவினையும் சார்ந்தவர்களாக உள்ளார்கள். தொழிலாளர் துறையின் முக்கிய பங்குகளில் தொழிலாளிக்கும், முதலாளிக்கும் இடையே ஏற்படுகின்ற பிரச்சனைகளை பேச்சுவார்த்தைகள் மூலம் சுமுகமான முறையில் தீர்வு காண்பதும் ஒன்றாகும்.

நமது தமிழ்நாட்டை பொறுத்தவரை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் தொழிலாளர்களுக்கு பிரச்சனைகளே இல்லை என்கிற நிலையில் அம்மா அவர்களின் அரசு செயல்படுகிறது. இன்றைய தேதியில் ஒரேஒரு தொழில் தகராறு மட்டுமே சமரச பேச்சு வார்த்தையில் உள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீண்ட காலம் பணியில் உள்ள தொழிலாளர் நலத்துறை அலுவலர்கள் அனுபவத்தைக்கொண்டு நடைமுறை சிக்கல்கள் சட்டரீதியாக உள்ள குறைபாடுகள் தற்போதைய காலத்திற்கேற்றவாறு திருத்துவது மற்றும் தீர்வு காண்பதற்கு இந்த மாநாடு ஒரு வாய்ப்பாக அமையும் என்று கருதுகிறேன். மாநிலத்தின் துரிதமான தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை நிலை நிறுத்துவதில் தொழில்துறை முக்கிய பங்கு வகிக்கிறது.

கடந்த 2 ஆண்டுகளில் 20 தொழில்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குழந்தை தொழிலாளர் ஒழிப்புமுறையில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக திகழ்கிறது. தொழிலாளர்கள் மற்றும் வேலை அளிப்பவர்களிடையே தொழில் நல்லுறவை வளர்த்தல், தொழில் அமைதியை பாதுகாத்தல் போன்ற நிலைகளில் தொழிலாளர் துறை சிறப்பாக பங்காற்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சமரச அமைப்பினை வலுப்படுத்துதல் என்ற தலைப்பில் தொழிலாளர் இணை ஆணையர் திரு. சம்சுதின் இப்ராகிம் அவர்களும், தொழில் நல்லுறவில் எழும் சவால்கள் என்ற தலைப்பில் தொழிலாளர் இணை ஆணையர் திருமதி. ஆர். செந்தில் குமாரி, அவர்களும் தொழிலாளர் நல்லுறவும், மாநில சட்டங்களும் என்ற தலைப்பில் தொழிலாளர் இணை ஆணையர் திரு. எம். இராதாகிருஷ்ண பாண்டியன் அவர்களும், ஹரியானா மாநிலத்தில் நிலவும் தொழில் உறவுகள் என்ற தலைப்பில் ஹரியானா மாநில தொழிலாளர் இணை ஆணையர் திரு. அனுபம் மாலிக்ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. சி சோம்புராஜன் மற்றும் இணை ஆணையர்கள் திரு. சி மாரிமுத்து ,திருமதி. உமாதேவி, மற்றும் மாநில அளவிலான தொழிலாளர் இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், தொழிலாளர் அலுவலர்கள் மாநாட்டில் பங்கேற்றனர்.

கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. கு. ரவிசங்கர் நன்றி கூறினார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**